**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No. 72/2021** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 1** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | பஹ்ராத் உசேன் |
| Father / Husband Name | : | முகமது பாரூக் |
| Village | : | 237, காவேரி நகர் 10 ம் தெரு, |
| Taluk | : | தஞ்சாவூர். |
| Caste & Religion | : | முஸ்லிம் |
| Calling | : | பொறியாளர் |
| Age | : | 24 /2021 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.10.2021**
**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது** திருமதி **எஸ். ஜெயந்தி**, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, **திரு. எம். செழியன், தட்டச்சர்**

## C.C.No. 72/2021 11.10.2021

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கோயம்புத்தூர் தனியார் நிறுவனத்தில் வடிவமைப்பு பொறியாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 24.09.2020 அன்று காலை 9.00 மணிக்கு என் அம்மா பெயர் சித்தி நிலோக் என்ற பெயரில் உள்ள ஸ்பிளண்டர் புரோ டிஎன் 49 ஏகே 3907 என்ற இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு தெற்கலங்கம் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள Jio Metric Computer Center-ல் படிப்பதற்காக இருசக்கர வாகனத்தில் சென்று அந்த மையத்தின் முன்பாக பூட்டி நிறுத்தியிருந்தேன். வகுப்பு முடிந்து மதியம் 3.00 மணியளவில் இருசக்கர வாகனத்தை எடுக்கச் சென்றபோது வண்டியை அங்கு காணவில்லை. அக்கம் பக்கம் தேடிப் பார்த்தேன். நானும் எனது நண்பர் சிந்தனைச் செல்வன் ஆகியோர் தேடிப் பார்த்தோம். வண்டி கிடைக்கவில்லை.

நான் சென்னைக்கு அலுவலாக சென்றிருந்தேன். அதனால் உடனடியாக புகார் கொடுக்கவில்லை. 28.09.2020 அன்று தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த புகார் மனுவை நானே எழுதினேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். பின்னர் 3 மாதங்கள் கழித்து வண்டி கிடைத்திருப்பதாக போலீசார் கூறினார்கள். நான் காவல் நிலையம் சென்று இருசக்கர வாகனத்தை அடையாளம் காண்பித்தேன். அப்போது போலீசார் 2 நபர்களை காண்பித்து அவர்கள் தான் எடுத்ததாக கூறினார்கள். அவர்களில் ஒருவரின் பெயர் கார்த்திக் ஆகும். மற்றொருவர் பெயர் ஞாபகம் இல்லை. அவர்களை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலாது. பின்னர் நீதிமன்றத்தில் மனு அளித்து இருசக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள வண்டி என்னுடையது. அந்த புகைபடம் அ.சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் அலுவல் பணியாக சென்னை சென்றதற்கு டிக்கெட் எதுவும் போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால், கொடுக்கவில்லை. நான் சென்னைக்கு செல்லவில்லை என்றும் போலீசார் சொன்னதன் பேரில் பொய்யாக சென்னைக்கு சென்றதாக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில், சொன்ன தேதியில் வாகனம் திருட்டு போகவில்லை என்றும், பொய்யாக வாகனம் திருட்டு போனதாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. என்னுடன் காவல் நிலையத்திற்கு சிந்தனைச் செல்வன் வந்தார். சிந்தனை செல்வன் என்னுடன் படித்தவர். சதீஷ் என்பவர் எனது கம்ப்யூட்டர் சென்டரின் ஆசிரியர். முகமது ஆரிப் , முபாரக் அலி, ஆறுமுகம், சீனிவாசன் ஆகியோர்கள் டோர் இந்தியா என்ற கடையில் வேலை செய்பவர்கள். அவர்கள் எனக்கு தெரிந்தவர்கள். நான் கம்ப்யூட்டர் சென்டர் செல்லும் போது எனக்கு பழக்கமானவர்கள். போலீசார் புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு

C.C.No. 72/2021 11.10.2021

இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கு சொல்லியுள்ள காரணம் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)